# செம்மண்

நிலம் 3 துகள் 147 வள்ளுவர் ஆண்டு 2052, 13 - 19 வைகாசி 2023 வாரமலர் பக்கங்கள் 17



# “முள்ளிவாய்க்காலில் 3லட்சம் பேர் இருந்தனர்”

## படைச் சிப்பாயின் வாக்குமூலம்

மொழியாக்கம்
கமலநாதன்

மேஜர் கீத் வலிகல என்பவர் கொழும்பு - நுகேகொட பகுதியைச் சேர்ந்தவர். 2001ஆம் ஆண்டில் இலங்கைப் படையில் சேர்ந்தவர். சேர். ஜோன் கொத்தலாவல படைப் பயிற்சிக் கல்லூரியிலும் தியத்தலாவ படைப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெற்ற இவர் பின்னர் பீரங்கிப் படைப்பிரிவில் பணியாற்றினார். இறுதிப்போர் வரை களத்தில் நின்று புலிகளுக்கு எதிராகப் போரிட்ட இவர் தனது அனுபவங்களை வனச யூரியூப் தளத்தில் பகிர்ந்திருந்தார். கடந்த வாரம் வெளியாகிய அந்த அனுபவத் தொடர்ச்சியின் மீதியே இது.

> புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிகமான புலிகள் இறந்துகிடக்கக் கண்டேன். அதேவேளை படையினரிலும் அதிகம்பேர் காயப்பட்டிருந்தார்கள். எமது அணி வெள்ளாம் முள்ளிவாய்க்கால் களப்பைக் கடந்து பாதுகாப்பு லைன் ஒன்றை அமைத்தது. அந்தப் பகுதியில் 3லம்சம் வரை மக்கள் இருந்தார்கள்.

### பரந்தனைக் கைப்பற்றினோம்

2008ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த பரந்தன் சந்தியைக் கைப்பற்றுவதற்காகப் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. பரந்தன், முகமாலைப் பகுதிகளில் ஒரே நேரத்தில் தாக்குதல்களைத் தொடுத்தோம். எமது முன்னேறும் அணியில் சினைப்பர் துப்பாக்கிதாரிகள் 3, 4பேர்களை வைத்திருந்தோம். இத்தாக்குதல்களின்போது படைத்தரப்பில் பெயர்பெற்ற



ஏனைய அணியினர் புதுக்குடியிருப்புநோக்கி நகர்ந் தனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து 55ஆவது படையணியுடன் கமால் குணரட்ன பரந்தனை நோக்கி வந்தார். தெற்கிலிருந்து வந்த படையணியும் வடக்கில் இருந்து வந்த படையணியும் சந்தித்துக் கொண்ட அந் தத் தருணம் மிக முக்கிய நிகழ்வாகும்.

அதன்பின்னர் எமது அணி புதுக்குடியிருப்பு நோக்கி நகர்ந்தது. சுதந்திரபுரத்தில் தங்கியிருந்த மக்கள் எமது பக்கம் வந்தார்கள். புலிகளின் 120 மில்லி மீற்றர் ஆட்லறிகள் ஆறு, 85 மில்லி மீற்றர் மோட்டார்கள் 3, சமா தானச் சூழல் காலத்தில் புலிகள் பயன்படுத்திய விலை யுயர்ந்த வாகனம் எனப் பலவற்றைக் கைப்பற்றினோம். இந்த நகர்வின்போது ஒரு நாள்கூட ஒரே இடத்தில் நிற்கவில்லை. தொடர்ச்சியாக முன் னேறிக்கொண்டிருந் தோம். புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிகமான கல்வீடு கள் இருந்தன. அதற்குள் மறைந்திருந்து புலிகள் கடுமை யாகத் தாக்கினார்கள்.

**அதிக தூரம் டாங்கியுடன் சென்றோம்**

புதுக்குடியிருப்பில் புலிகள் அமைத்திருந்த மண் அணை யொன்றைத் தாண்டி 20 மீற்றர் தூரத்தைக் கைப்பற்றுவதற் காக டாங்கியுடன் முன்னேறினோம். அப்போது அந்த இடங்கள் சரியாக எமக்குத் தெரியாததால் புலிகளின் பகுதிக்குள் 350 மீற்றர்வரை சென்றுவிட்டோம். பின்னர்தான் தெரிந்தது புலிகளிடம் அகப்பட்டுவிட்டோம் என்று புலிக ளிடமிருந்து எதிர்த் தாக்குதல்கள் எவையும் வராததால் டாங்கி சென்ற இடத்தையே பலப்படுத்திக்கொண் டோம். சற்றும் எதிர்பாராத வெற்றியாக அது அமைந்தது. நாம் இழைத்த தவறொன்றை எமக்குச் சாதகமாக்கிக் கொண் டோம்.

**சொகுசுக் கதிரைக்குள் குண்டு**

புதுக்குடியிருப்பு மருத்துவமனைப் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் மருத்துவமனைக்கு முன்னாலிருந்த வீடொன்றில் அழகான குஷன் செற்றிகள் இருப்பதைக் கண்டேன். நானும் எனது உயர் அதிகாரி ஒருவரும் அதில் அமர

சினைப்பர் சிப்பாயான நிறோ என்பவர் 27 புலிக ளைக் கொன்றார். இத்தாக் குதலின்போது புலிகளின் இலக்குகளை நோக்கி அதி கம் சூட்டுப் பலத்தைப் பிர யோகித்தோம். நிலத்தில் பொருத்தி வைத்துத் தாக் குதல் நடத்தும் ஆர்.பி.எல் ஆயுதத்தை நிலத்தில் பொருத்தாது டிரக்ரர் பெட்டியில் பொருத்தித் தேவையான இடங்களுக்கு நகர்த்திச் சென்று தாக்குதல் நடத்தினோம்.

**புதிய தாக்குதல் உத்தி**

எமது டாங்கியில் பொத்தப்பட்டுள்ள துப்பாக்கிகளை வைத்து ஆயிரத்து 800 மீற்றர் தூரத்துக்குச் சரியான இலக் கைத் தாக்க முடியுமா என்று துப்பாக்கிக்குப் பொறுப் பானவர்களைக் கேட்டபோது தாராளமாகத் தாக்கலாம் என்றார்கள். என்னிடமிருந்த ஜி.பி.எஸ் கருவியை வைத்து அந்த இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கினேன். இத் தாக்குதல் முறை படையின ருக்கு இழப்புகளைக் குறைப் பதாகவும், பாதுகாப்பானதாக வும் புலிகளுக்குப் பெரிய ளவில் சேதங்களை ஏற்படுத் துவதாகவும் இருந்தது. இந்த முறையைப் புதுக்குடியிருப்புப் பகுதி வரை தொடர்ந்தோம். அது அதிக வெற்றிகளையும் பெற்றுத் தந்தது. ஆட்லறி, மோட்டார் தாக்குதல்களைப் போல டாங்கியைப் பாவித்து அடித்தோம். 2008 மார்கழி 31ஆம் திகதி கிளிநொச்சி நகரை அடைந்தோம். அங்கு 58ஆவது படையணி நிலை கொண்டிருந்தது. கிளிநொச்சிப் பகுதிக்கு அதற்கு முன்னர் நான் சென்றதில்லை. அதன் பின்னர் பரந்தன் சந்திக்கு வடக்காகப் புலிகள் முகமா லையிலிருந்து வரமுடியாத படி ஏ9 பாதையை மூடினோம்.





நினைத்து அருகில் சென்றபோது அவற்றில் தூசி படிந்து கிடந்ததால் அமரவில்லை. பின்னர் அங்கு வந்த பொறியியல் பிரிவினரிடம் சோபாக்கள் இருப்பதைப் பற்றிக் கூறியபோது அவர்கள் அதைப் பரிசீலித்தார்கள். அதில் அமர்ந்தால் வெடிக்கும் ஏற்பாட்டுடன் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று தெரியவந்தது. பின்னர் அவை வெடிக்க வைக்கப்பட்டன.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிகமான புலிகள் இறந்து கிடக்கக் கண்டேன். அதேவேளை படையினரிலும் அதி கம்பேர் காயப்பட்டிருந்தார்கள். எமது அணி வெள்ளாம் முள்ளி வாய்க்கால் களப்பைக் கடந்து பாது காப்பு லைன் ஒன்றை அமைத்தது. அந்தப் பகுதியில் 3லம்சம் வரை மக்கள் இருந்தார்கள்.

**உதவியாளர் ரூபசிங்கவின் சாவு**

எனது உதவியாளராக இருந்த ரூப சிங்க என்பவர் தனது மகளின் பிறந்த தினத்துக்கு வீட்டுக்குச் செல்வதற்காக என்னிடம் விடுமுறை கோரியிருந்தார். நானும் அதற்கு அனுமதித்திருந்தேன். திடீரென ஓரிடத்தில் தாக்குதல் நடந்த போது அவரைப் பின்னால் வருமாறு கூறினேன். அவர் பின்னால் வராது புலிகளை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கடுமையாகச் சண்டையிட்டார். தலையில் சூடுபட்டு தலைப் பகுதி சிதறி எனது மடியில் வந்து விழுந்தது. அந்த இடத்திலேயே அவர் சாவடைந்தார். அந் தச் சம்பவத்தை நினைத்தால் இன்று வரை எனக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது.



# பெண் சாவுகள்



# அதிகரிப்பது ஏன்...?

மேனகா

இலங்கையில் தற்போது அதிகம் பேசப்படும் விடயமாக இருப்பது களுத்துறையைச் சேர்ந்த 16 வயது மாணவி ஒருவர் விடுதியின் 5ஆவது மாடியிலிருந்து நிர்வாணமாக விழுந்து இறந்த செய்தி ஆகும். சமூக வலைத்தளங்களைத் தாண்டிச் சமூகத்திலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது சம்பவம். இதைவிட இரண்டு ஆசிரியர்கள், ஒரு விவசாயப் போதனா ஆசிரியர், கிராம அலுருவலர் எனப் பல பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கொலை விவகாரங்கள் ஒப்பீட்டளவில் தமிழர் பகுதிகளில் குறைவாக இருந்தபோதிலும் ஏதோவொரு பெண் கொல்லப்படுகிற நிலை காணப்படவே செய்கிறது. அண்மையில் நெடுந்தீவில் வயதான அம்மாக்கள் கொல்லப்பட்டனர். பின்னர் நகைக் கடையில் பணிபுரிந்த பெண் ஒருவர் உயிரை மாய்த்தார். அதைவிட தவிசாளர் ஒருவருடன் தொடர்பைப் பேணிய பெண் ஒருவர் உயிர்மாய்த்தார். இவ்வாறாக உயிர்மாய்ப்பு என்று விடயம் வெளிப்பட்டாலும் கொலை என்கிற கோணமும் அதற்கு இருக்கவே செய்கிறது.

**அம்மாவுக்கு ஏன் முக்கியத்துவம்**


பெண்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருவதாகவே தெரிகிறது. நெடுந்தீவில் அம்மாக்களைத் தாண்டி அம்மம்மாக்களையும் கொலை செய்த கொடூரம் நடந்தேறியது. இங்கு அம்மா என்று குறிப்பிடுவது தற்போது அம்மாக்களாக இருப்பவர்களையும் எதிர்காலத்தில் அம்மாக்களாக ஆகவிருப்பவர்களையுமே.

பிள்ளையைப் பெற்றெடுத்ததாலேயே பெண்கள் அம்மா என்கிற உயர்வான மதிப்பைப் பெறுகிறார்கள். ஆதிச் சமூகம்கூடத் தாய்வழிச் சமூகமாகவே வாழ்ந்திருக்கிறது - வழிநடத்தப்பட்டிருக்கிறது. அம்மா தனது குழந்தை அழும்போதெல்லாம் பாலூட்டியவள் என்பதால் பிறப்பை விட வளர்ப்பிலும் முக்கியம் பெறுகிறாள். தனது பிள்ளை எதைச் செய்தாலும் அரவணைத்துத் தனது பிள்ளைக்காகக் களமிறங்குபவளும் அம்மாதான். தனது பிள்ளையைச் சமூகமே வெறுத்தாலும் தனது பிள்ளைக்காகப் பிள்ளையின் பக்கத்தில் நின்று வாதாடுபவள் தாய் மாத்திரமே. ஒரு விடயத்தில் தனது பிள்ளை தவறிழைத்தது எனத் தெரிந்தும் அதை விட்டுக்கொடுக்காமல் அதற்காக அவள் சண்டையிடுவது சமூகத்தில் மிக நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

இவ்வாறு பிறப்பிலும் வளர்ப்பிலும் தனது பிள்ளைகளுக்காக அரணாக நிற்கும் அம்மாக்களில் பலர் தமது பிள்ளைகளாலேயே கொல்லப்படுவது அம்மா ஸ்தானத்திலுள்ள பெண்களைக் குலை நடுங்க வைத்திருக்கிறது. பாடசாலை மாணவிகளை வன்புணர்வு செய்வது, கொலை செய்வது என ஏராளமான சம்பவங்கள் நாளாந்தம் நடக்கின்றன. இலங்கையில் இது புதினமல்ல என்பதும் அவற்றை மிக இலகுவாகக் கடந்து செல்வதும் நாளாந்த சம்பவங்களாகிவிட்டன.

**போதைப் பழக்கமும் பெண்கள் மீதான வன்முறையும்**

இலங்கையில் தற்போது அதிகம் பரவியிருக்கும்




# கேரளா ஸ்ரோறி

## முழுதும் செயற்கை

அண்மையில் இந்தியாவின் திரைத்துறையில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியிருந்த படம் தி கேரளா ஸ்ரோறி. திரைத் துறையைத் தாண் டிப் படத்தின் முன்னோட்டக் காட்சியைக் கண்ட கேரள அரச தரப்பு அதற்குக் காட்டிய எதிர்வினையால் பெரும் பேசுபொருளானது படம். இதனால் பல்வேறு எதிர்ப்புகள், எதிர்பார்ப்புகள் என ஏதோவொரு விதத்தில் இந்தப் படம் குறித்துப் பல தரப்பினரும் சிலாகிக்கத் தொடங் கினர். இத்தகைய நிலையில் வெளியாகிய அந்தப் படம் எப்படியுள்ளது என்று இந்த வாரம் பார்ப்போம்.



**கதை**

கேரளாவின் காசர்கோட் பகுதியில் உள்ள மருத்து வத் தாதிக் கல்லூரிக்கு, அந்த மாநிலத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்து பெண்கள் வந்து சேர் கின்றனர். ஷாலினி (ஆதா ஷர்மா), கீதாஞ்சலி (சித்தி இத்னானி), நிமா (யோகிதா பிகானி), ஆசிஃபா (சோனியா பலானி) ஆகியோர் அதில் அடங்குகின்றனர். இந்த 4 பேரும் நெருக்கமான நண்பர்களாகி விடுகின்றனர். இதில் முஸ்லிம் பெண்ணான ஆசிஃபா மற்ற 3 பேரிடமும் எப்போதுமே இஸ்லாம் மதம் குறித்துப் புகழ்ந்து பேசுவதையும், முன்னிறுத்திப் பேசி அவர்களைப் பல் வேறு வழிகளில் மூளைச்சலவை செய்வ திலும் முனைப்பாக இருக்கிறார். இதனால் ஒருகட்டத்தில் ஷாலினியும், கீதாஞ்சலியும் இஸ்லாத்துக்கு மதம் மாறுகின்றனர். நிமா மட்டும் நழுவி விடுகிறார். இறுதியில் அந்த இரண்டு பேரையும் ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற பயங்கரவாத அமைப்போடு சேர்க்கும் நிகழ்ச்சி நிரலில் ஆசிஃபாவின் முயற்சி தொடர்கிறது. அது பலித்ததா, இல்லையா, பின்பு என்னவெல்லாம்

போதைப் பாவனை பெண்கள் மீதான குற்றச் செயலர்களுக்கு முக்கிய கரணமாகக் ஒன்றாகக் கூறப்பட்டாலும் பெண்கள் மீதான அத்துமீறல்களுக்குத் தண்டனைகள் போதமாலிருப் பதும் பாதிக்கப்பட்ட பெண்க ளுக்கு எதிராகக் குற்றம் புரிந்த வர் சார்பாகப் பணத்துக்காகச் சட்டத்தரணிகள் களமிநங்கி வாதாடிக் குற்றவாளிகளை நிரபராதிகள் ஆக்குவதும் மிக மோசமான நடைமுறையாகி விட்டது. இவையே பெண்கள் மீதான வன்முறைகளின் அதி கரிப்புக்குக் காரணங்களாக இரு க்க முடியும். குற்றம் நிரூபிக்கப் பட்டால் இதுதான் தண்டனை என்ற வரையறை இருந்தபோதி லும் சடடத்தரணிகள் சாட்சிக ளைத் திசைமாற்றி குறித்த குற்ற வாளிளைக் குற்றம் புரியாதராக் குவதும் உண்டு.

வித்தியா கொலை வழக்கில் குற்றம் புரிந்தவர்கள் தண்டனை பெற்ற பின்னரும் மேல் முறை யீடு பற்றிய பேச்சுகள் அடிபடு கின்றன. சிலவேளை அவர்கள் பணத்தை வாரியிறைத்துச் சுற்ற வாளிகாக மாறினாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

சமூகம் தறிகெட்டுப்போவ தற்கு அரசியல், மத, சமூகத் தலைவர்களாக இருப்பவர்கள் தமது பொறுப்பில் இருந்தும் கட மையில் இருந்தம் தூர நிற்பதே முக்கிய காரணமாகும்.

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக் கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப் பினிலே'' என அம்மாக்கள் மீது மாத்திரம் பிழையத் தள்ளிவிட முடியாது. இன்றுள்ள நிலையில் மிகச் சாதாரணமாக அம்மாக்க ளைக் கொலை செய்வதற்கு அம்மாக்களே காரணம் எனக் கூறிவிட முடியாது. பாதிக்கப் பட்ட பெண்களுக்குச் சார்பாக அல்லது எதிராக நிற்கும் படித்த அறிஞர்களான சட்டத்தரணி களையும் அம்மாக்களே பெற் றெடுத்தார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பெண்கள் மீதான வன்முறைகள் சமூதாயத்ததுக்குப் பெரும் சாப மாகவே இருக்க முடியும்.

நடந்தது என்பதே மீதிக்கதை.

'உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்ட படம்' என குறிப்பிடப்படும் இந்தப் படம் எந்த இடத்திலும் சிறிதும் நம்பகத்தன்மையுடன் இல்லை. காரணம், விடுதியில் சந்திக்கும் 4 மாணவிகளும் தொடக்க காட்சியிலிருந்தே மதம் குறித்தும், கடவுள் குறித்தும், மத வழிபாடுகள் குறித்தும் ஒரே உரையாடிக்கொண்டே இருக்கின்றனர். அவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு காட்சியிலும் பெயரளவுக்குகூட வேறு எதைப் பற்றியும் பேசாமல், மதத்தை மட்டுமே பேசுவது முழுச் செயற்கையாக உள்ளது.

அதேபோல, பலவீனமாக எழுதப்பட்ட கதாபாத்திர அமைப்பு சுத்தமாக ஒட்டவில்லை. மற்றக் கடவுள்கள் பலவீனமானவை என்று கூறி, அதற்கான காரணத்தை ஆசிஃபா அடுக்கியதும் 'ஆமால்ல...' என மற்ற மாணவிகள் நம்புவதும், நரகத்திலிருந்து இஸ்லாம் மட்டுமே காக்கும் என்பதையும், கைபேசி பயன்படுத்துவது பாவம் என்பதுபோல எதைச் சொன்னாலும் தாதிய மருத்துவம் படிக்கும் மாணவிகள் உடனே நம்பி மயங்கிவிடுவது இந்தியாவில் அதிக கல்வியறிவு கொண்ட கேரளாவில் எந்த அளவுக்கு சாத்தியம் என்பது விவாதத்துக்குரியது. குறிப்பாக, முதன்மைக் கதாபாத்திரமான ஷாலினி கதாபாத்திரம், சக மாணவி ஆசிஃபா சொல்வதையும் நம்புகிறார், அடுத்து மத குருமார் சொல்வதையும் நம்புகிறார், அடுத்து இஸ்லாமிய ஆண் ஒருவர் சொல்வதையும் நம்புகிறார்.

தாதிய மருத்துவம் படிக்கும் அளவிற்கான தெளிவு, சிரியாவில் மாட்டிக்கொள்ளும்போது அங்கிருந்த எல்லைகளைக் கணிக்கும் திறன் கொண்ட மாணவியின் செயற்கை மூளை திரைப் பலவீனம். அதிலும் ஹிஜாப்பின் முக்கியத்துவதை விளக்குகிறேன் என்ற பெயரில் வரும் காட்சி அப்பட்டமான திணிப்பு.

ஹிந்தியில் உருவாக்கப்பட்டுள்ள இப்படத்தில் கேரளாவில் உள்ள அனைவரும் ஹிந்தியில் பேசுவது படத்தையே ஹிந்தியில் மறுஆக்கம் செய்து பார்க்கும் உணர்வை கொடுக்கிறது. இப்படியாக நம்மை திரையிலிருந்து விலக்கும் காட்சிகள் ஒருபுறமிருக்க, படத்தின் இரண்டாம் பாதி அழுகையையும், பரிவையையும், ஒரு தரப்பின் மீதான வெறுப்பையையும் உமிழ 'நாடக'த்தன்மையுடன் சித்திரித்திருப்பது பெரும் அயர்ச்சி.

குறிப்பாக 'காஷ்மீருக்கு விடுதலை வேண்டும்', 'தேசியவாதம் ஹராம்... இஸ்லாம்தான் அடையாளம்' போன்ற பிரிவினைக் கருத்துகளை கேரள இஸ்லாமியர்கள் வீடுகளில் எழுதி வைத்திருப்பது, லிப்ஸ்டிக் போட்டதற்காக பெண்ணின் கைகளைக் கொடூரமாக வெட்டுவது, இறுதியில் ஹிஜாபைத் தீயிலிட்டு எரிப்பதுதான் 'விடுதலை' என்பதை முன்வைப்பது, தொடர்ந்து இஸ்லாமியர் ஒருவர் மற்ற கடவுள்களை விமர்சிப்பது, ஹிஜாப்பில் தூக்கு மாட்டிக்கொள்வது எனப் படம் முழுக்க வெறுப்பு மட்டுமே நோக்கமாக கொண்டிருப்பதன் மூலம் பிரசாரம் மட்டுமே மேலோங்குகிறது.



கொம்யூனிஸ்ட் அப்பாவிடம், பாதிக்கப்பட்டு திரும்ப வந்த அவரது மகள், 'நார்த்திகம், கொம்யூனிசம் சொல்லிக் கொடுத்தற்கு பதில் நம் மதத்தின் பெருமையைச் சொல்லிக் கொடுத்திருக்கலாம்' என்ற வசனத்துக்கான தேவையையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

**பாத்திரங்கள்**

ஷாலினி கதாபாத்திரத்தில் நடித்துள்ள ஆதார ஷர்மா தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்துகிறார். யோகிதா பிகானி, சோனியா பலானி, சித்தி இத்னானி மூவரும் நடிப்பில் ஸ்கோர் செய்கின்றனர். தேவதர்ஷினி, பிரணாவ் மிஷ்ரா உள்ளிட்ட பலர் தேவையான நடிப்பை வெளிப்படுத்துகிறார்கள். ஆப்கானிஸ்தான் எனக் காட்டப்படும் நிலப்பரப்பையும் அதன் வெம்மையையும் பிரசாந்த் தன் கேமரா மூலம் காட்சிப்படுத்தியிருந்த விதம் கவனம் பெறுகிறது. விரேஷ் ஸ்ரீவல்சா, பிஷக் ஜோதியின் பின்னணி இசை பரிவைக் கோரும் இடங்கள் சீரியல் தன்மை. படம் சுவாரஸ்யமும், சினிமாத்தனமும் இல்லாமல் அதிக பரப்புரைக் காட்சிகளுடனும் நமக்கு ஒட்டாத திரைக்கதையுடன் இருப்பது பெரும் பலவீனம்.




தர்மராசா

# சிறைக்குள்...

## கன்னியமான சிறைச்சாலை ஊழியர்

நான் 6 சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிறேன். எனது சிறைவாச அனுபவத்தில் நூற்றுக்கணக்கான சிறை ஊழியர்களைச் சந்தித்தேன். மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடமையாற்றிய மகாலிங்கம் ஐயா என்று எல்லோராலும் அழைக்கப்படும் மகாலிங்கம் என்பவரே நான் சந்தித்த மிக நேர்மையான சிறை ஊழியராக இருந்தார். அவரைச் சிறந்த ஓர் அதிகாரி என்று என்னால் மதிப்பிட முடிந்தது. அவரது கைகள் கறை படியாதவை. சிறைச்சாலையை முதலீட்டு மையமாக ஒருபோதும் அவர் பயன்படுத்தியதில்லை. பத்து சதம்கூட கைதிகளிடம் கைநீட்டி வாங்காத கன்னியமான மனிதர். சிறைச்சாலைச் சூழலில் அவ்வாறு வாழ்வது ஒரு தவம். அவர் அதில் வெற்றி பெற்றார்.

**பத்து சதம்கூட கைதிகளிடம் கைநீட்டி வாங்காத கன்னியமான மனிதர். சிறைச்சாலைச் சூழலில் அவ்வாறு வாழ்வது ஒரு தவம்**

9.9.2002அன்று அவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார் என்று அறிந்தேன். அவரது சேவைக்காக அவர் பெற்ற பெறுமதி மிக்க பட்டம் "நல்ல மனிதர்" என்கிற நற்பெயர் தான். அவர் சிறைச்சாலையில் பணம் உழைக்க நினைத்திருந்தால் பத்துடன் பதினொன்றாகப் போயிருப்பார்.

போகம்பரை, அனுராதபுரச் சிறைகளில் யாராவது தகவல் கொடுத்து அல்லது திடீரென மேலதிகாரிகள் வந்து சிறை அறையில் பரிசோதித்துத் தம்மிடமுள்ள பணத்தை எடுத்து விடக்கூடும் என்றோ, திடீரென வேறு வாட்

டுக்கு மாற்றப்படக்கூடும் என்ற பயத்திலோ சிறைக்குள் வியாபாரம் செய்து பணம் சம்பாதித்து வைத்திருப்போர் தம்மிடமுள்ள ஆயிரம், ஐந்நூறு ரூபாத் தாள்களை மெலிதாக உருட்டித் தங்கள் மல வாசலுக்குள் தாங்களே தள்ளிக் கொள்வார்கள்.

அவ்வாறான நிலையில் அந்தப் பணத்துடன் வேறு சிறை அறைகளுக்கோ, சிறைச்சாலைக்கோ போய் விட்டால், புதிதாகப் போய்ச் சேரும் இடத்திலிருந்து அவர்களால் தமது வியாபாரத் தைத் தொடர முடியும். நான் விடுதலையான பின் ஆயிரம், ஐந்நூறு ரூபாத் தாள்களைக் கண்டால் அந்த ஞாபகம்தான் வந்துபோகும். பழைய தாள்களைக் கையில் தொட அருவருப்பாக இருக்கும்.


ஒரு நாள் திடீரென அறைகள் சோதனையிடப் பட்டபோது பணம் வைத்திருந்த ஒருவருக்கு அதை மறைக்க அவகாசம் கிடைக்கவில்லை. ஜட்டி போட்டிருந்தால் அதையும் கழற்றித்தான் சோதனை செய்வார்கள். எனவே அவர் தன்னிடமிருந்த பணத் தாளை மடித்து ஆணுறுப்புக்கு அருகாக விதையுடன் சேர்த்து வைத்து றப்பர் பாண்டினால் கட்டி கொண்டு ஜட்டியைப் போடாமல் சாறத்துடன் வெளியே வந்து உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். தன்னைச் சோதனை செய்பவரிடம் சாரத்தை அவிழ்த்துக் காட்ட, அவர் ஜட்டி போட்டிருக்கவில்லை என்றதும் வெளியே மேலதிகமாகப் பரி சோதிக்காது விட்டு விட்டார்கள். பணத்தாள் மாட்டிக்கொள்ளாது தப்பித்தார்.

பாட்டிக்காரன் ஒரு கடதாசித் துண்டில் ஒருவரது பெயரையும் பொய்யான ஓர் இலக்கத்தையும் எழுதிக்கொண்டு வந்து கடமையிலிருக்கும் ஊழியரிடம் காட்டிவிட்டு சிறைச்சாலைக்குள் வந்து வழக்குக்காகக் கைதியைக் கூப்பிடுவதுபோல பாசாங்கு செய்து தான் கொண்டு வந்த ஹெரோய்ன் போன்ற பொருள்களை விற்றுவிட்டுக் கைதிகளிடமிருந்து வேறு ஏதாவது பொருள்களை வாங்கிக்கொண்டு வெளியேறி விடுவான்.

புகைப்பதற்கு பீடி இல்லாது விட்டால்கூட இப்படியொரு பொய் விளையாட்டைக் காட்டிக் கைதிகள் இருக்கும் பகுதிக்கு வந்து பீடி வாங்கிச் செல்வார்கள். இவ்வாறு வந்து கைதியினது பெயரைக் கூப்பிடும் போது சிறை ஊழியர்கள் யாராவது அவ்விடத்துக்குச் சிலவேளைகளில் வந்து என்ன விடயம் என்று கேட்டால் தன்னைப் பிடி கொடுக்காமல் இந்தக் கைதி இங்கு இருக்கிறாரா என்று பார்த்து வரும்படி அலுவலகத்தில் சொன்னார்கள் என்று சொல்லித் தப்பித்து விடுவான். இவ்வாறு பெயர் கூப்பிடப்படுகிறபோது பெயர் கூப்பிடப்பட்ட அந்தக் கைதிக்கு மன அமைதி இருக்காது. வழக்கு முடிய இருக்கும்போது புதிதாக ஏதாவது வழக்கு வந்துவிட்டதோ? குற்றத்தடுப்புப் பிரிவினர் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்போகிறார்களோ? செத்தவீட்டுச் செய்தியோ? என்றெல்லாம் குழம்பிப் போவார்கள். பின்னர் வேறு கைதிகள் மூலம் அலுவலகத்தில் விசாரித்துப் பார்த்தால் அங்கிருந்து, 'கண்டதுமில்லை கேட்டதுமில்லை'' என்ற மாதிரியான பதிலல்களே வரும்.

களுத்துறைச் சிறைச்சாலையில் வியாபாரம் செய்கிற சிலர் களஞ்சியத்தில் பொருள்களை எடுக்கும் போது பீடிக்கட்டுகளை அதிகம் வாங்கி வைக்கின்றனர். தோறா என்ற பெயருடைய மிகச் சிறிய பீடிக்கு அங்கு நல்ல மவுசு. பாட்டிக்காரர்களைக் கெண்டு செய்விக்கக்கூடிய வேலைகளுக்குக் கூலியாக வழங்கக் கூடிய சக்திவாய்ந்த பொருள். ஒரு கட்டின் விலை 12ரூபா 80 சதமாக இருந்தபோதிலும் சிறைச்சாலையில் கைதிகளின் காசோலையை மாற்றிப் பொருட் கொள்வனவு செய்து கொடுக்கக் காலதாமதம் ஏற்பட்டால் பீடிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும். இந்தச் சந்தர்ப்பங்களில் பீடிக் கட்டுகளைக் கடனாகப் பெற்றால் பொருள்களை வழங்கும்போது ஒரு கட்டுக்கு இரண்டு கட்டாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். சிலர் மிகவும் தாட்டுப்பாடான காலங்களில் ஒரு பீடிக்கட்டை 75ரூபாவுக்குக் கூட விற்றிருக்கிறார்கள்.


களுத்துறைச் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு வருகின்ற காசோலையை உடனடியாக மாற்றி அதற்குப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதில்லை. பல ஆயிரக்கணக்கன ரூபாக்கள் இவ்வாறு காசோலை மூலம் சிறைக் கைதிகளுக்கு அனுப்பப்படுவதால் சிறைச்சாலைத் தரப்பினர் அவற்றை மாற்றித் தமது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திவிட்டு இன்னும் காசோலையை மாற்றவில்லை நேரமில்லை என்று சாட்டுச் சொல்வார்கள். இது சிறை ஊழியர்களுக்கு நல்ல வருமான மார்க்கமாக இருந்தது. ஆனால் பூசாச் சிறையில் வழமையாகக் காசோலை பெறுபவர்களுக்கும் அதை வாடிக்கையாகக் கொண்டிருந்தவர்களுக்கும் அந்தத் தருணத்தில் காசோலை இல்லாமலே பொருள்களை வாங்கித் தருவார்கள். காசோலை கிடைத்தவு டன் மாற்றி முன்னர் தாம் வழங்கிய பணத்தை அதிலிருந்து கழித்துவிட்டு மீதிப் பணத்தைப் பதிவு செய்து வைப்பார்கள். (தொடரும்)



# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)




எது எவ்வாறானாலும், இனிமையான இரகசியமொன்றைத் தமது நெஞ்சத்துக்குள்ளே மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பது உண்மையே.

இருநூறு வருட குறுகிய காலத்துக்குள் ஜெயவர்த்தன குடும்பத்தினர் வழிபட்ட தெய்வங்களும் அனேகம். இந்துத் தெய்வங்களை வழிபடுவதைக் கைவிட்ட அவர்கள் ஒல்லாந்துச் சீர்திருத்தச் சபையில் சேர்ந்தார்கள். அங்கிருந்து இங்கிலாந்துச் சபைக்கும் அடுத்து இலங்கைச் சபைக்கும் மாறினார்கள். இறுதியில் போர்க்குணம் மிக்க பௌத்தர்களிடையே நிலைபெற்றார்கள். இப்படிப் பல சமயங்களுக்கும் மாறியபோதும், விரல் விட்டு எண்ணக்கூடிய சிறந்த பக்திமான்கள் சிலரும் அவர்களிடையே இல்லாமல் இல்லை. அத்தகையோருடன் இப்போது புதிதாக இணைந்துகொண்டவர் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்தன ஆவார். முன்மாதிரியான கிறிஸ்தவ பக்திமான் ஈ.டபிள்யூ ஜெயவர்தன இப்போது உயிரோடு இல்லாதது அவருடைய புதல்வரின் அதிர்ஷ்டமாகும்.

08

ஜெயவர்தன குடும்பத்தினர் வினோத உடைப் போட்டிகளில் வெற்றிபெறும் திறமை உடையவர்கள். பறங்கியராகவும், வெள்ளையராகவும் தோற்றமளிக்கும் நிபுணத்துவம் கொண்ட அவர்கள், ஆரியச் சிங்களத்தை ஆரூடம் செய்துகொண்டவர்கள் அணியும் தமிழர்களின் உடை என்பதை எப்படியும் மறைக்க முடியாத - வட இந்தியர்கள் இரு பகுதிகளாகப் பிரித்து அணியும் தோதியைப் போன்றதென்று கூற முடியாத - துணி மற்றும் பெனியன் அணிந்து போட்டியில் கலந்து கொள்ள வல்லவர்கள்.

தமிழ் மொழியையே ஆரம்பத்தில் ஜெயவர்தன குடும்பத்தினர் பேசினார்கள். இந்த நாட்டுக்கு வருகை தந்த பின் அருவருப்புடன் தமது தேசிய மொழியை ஒதுக்கி வைத்தனர். தமது எஜமானர்களின் ஜெர்மன் மொழி கலந்த ஒல்லாந்து மொழியைப் பேசித் திக்குத் தெரியாமல் திணறினார்கள். பின்னர் சகோதர ஆரியர்களுடன் இரத்த உறவை உண்டாக்கி நேரடித்


**துன்பமும் துயரமும் நிறைந்த அவ் வாறான சிரமமான நிர்க்கதியான நிலை சுதேசிய சாதாரண சிறுவன் ஒருவன் வாழ்வில் குறுக்கிட்டிருக்குமானால் தாக்குப் பிடிக்கும் சக்தியை இழந்துவிடுவான்.**

தொடர்புகளை உண்டாக்கிக் கொண்டார்கள். எனினும் டச்சுக் காரர்களை விரட்டி விட்டுப் பிரித்தானியர்கள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டதும் "மம்மி டெடி" என்று பெற்றோர்களை அழைக்கும், வம்சாதிபதிகளுக்கேயுரிய ஓக்ஸ்போர்ட் உச்சரிப்புடன் ஆங்கிலம் பேசிய ஜெயவர்தன ஒருவரும் இருந்தார். அவர்களுக்கு மொழிகளின் மீதிருந்த விருப்பம் அலாதியானது. தமிழிலி ருந்து ஒல்லாந்து மொழிக்கும் அதிலி ருந்து ஆங்கிலத்துக்கும் நகர்ந்த ஜெயவர்தன பரம்பரையினர் ஆங்கிலத்தையும் மீறி இப்போது சிங்களத்தில் மாத்திரம் பேசுவதை எளிய வெற்றி என்றுகூறிவிட முடியாது.

ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தனவின் வம்சாவளியின்படி அவருடைய முப்பாட்டனார் தம்பி முதலி ஆவார். தம்பி முதலி என்ற பெயரினால் அவர் முஸ்லிம் இனத்தவர் எனத் தவறாக எண்ணிக்கொள்ளவும் இடமுண்டு. இந்த மனிதரின் குணாதிசயங்களைப் பார்க்கும்பொழுது ஏதேனும் சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இவர் முஸ்லிம்போன்று நடித்திருப்பாரோ என்ற சிரமமான எண்ணமும் தோன்றுகிறது. ஆனால், அவர் ஒரபோதும் இஸ்லாமிய தர்மங்களைப் பின்பற்றவில்லை என்பதோடு இஸ்லாத்தைத் தழுவவும் இல்லை.

சியனே கோரளையில் ஹங்வெல்லைக்கு அண்மித்த வெல்கம என்ற இடத்தில் தம்பி முதலி பிறந்தார். "சிலோன் கெஸட்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தம்பி முதலியின் ஆரம்பச் சொற்கள் வருமாறு ஆகும். "அவருக்கு மூன்று வயதாகியிருக்கும்போதே அவருடைய தந்தையார் காலமாகிவிட்டார்" எதிர்கால பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் பரம்பரைக்கு வம்சத்தின் ஆரம்பக் குடும்பப் பெயரை இரகசியமாக மீதப்படுத்தி ஒரு பேனாவின் கீறலினால் கடந்த காலத்தை இரத்துச்செய்துவிட்டு இனம், மதம் மற்றும் உடையினை மாற்றம் செய்தது தொடர்பில் இலங்கை வரலாற்றில் சாதனை படைத்த நபர் குறித்து தெரிவிக்கப் பட்டிருப்பது இவ்வாறே. மேலும் அந்தப் பத்திரிகைளில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

"இந்த மறைவுக்கு (தம்பி முதலியின் தகப்பனார் காலமானது குறித்துக் கட்டுரையாளர் இவ்வாறுதான் குறிப்பிடுகிறார்) அடுத்து வந்த கஷ்டங்கள் காரணமாகக் குடும்பத்தினர் பல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. அதனால் இளமைக்காலம் நிச்சயமாகவே துன்பம் நிறைந்ததாகும். துன்பமும் துயரமும் நிறைந்த அவ்வாறான சிரமமான நிர்க்கதியான நிலை சுதேசிய சாதாரண சிறுவன் ஒருவன் வாழ்வில் குறுக்கிட்டிருக்குமானால் தாக்குப் பிடிக்கும் சக்தியை இழந்துவிடுவான். அச்சிறுவன் கைவிடப்பட்ட நிலையை அடைந்துவிடுவான் என்பது நிச்சயமே. எனினும் சுதேசிகளிடம் அரிதாகக் காணப்படும் துர்லப சக்தியை சிறுவயது தொட்டே வெளிப்படுத்திய சிறுவன் ஜெயவர்தன அந்தத் துர்ப்பாக்கியத்துக்கு அஞ்சாது முகம்கொடுத்தான். துரதிர்ஷ்டத்தை மீறி மீண்டும் தலை தூக்க முடியுமா என்பதை நிச்சயமாகக் கூற முடியாத சந்தேகத்துக்கு இடமான நிலையில் குறிக்கோள்கள் இருண்டு போனபோதும், அவ்வனைத் துத் துன்பங்களுடனும் போராடி வாழ்வில் வெற்றி காண்பதற்கு அபரி மிதமான துணிச்சல் அவனிடத்தே இருந்தது. ஆரம்ப காலத்தில் எதிர் பாராத விதமாக ஏற்பட்ட அனைத்துத் துன்ப துயரங்களுக்கும் அவன் அசையா நெஞ்சுறுதியுடன் முகம் கொடுத்த பாங்கு பிற்கால வரலாற்றின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டது". (தொடரும்)



ஜே.ஆர். ஜெயவர்தன

# ஏதாலும் யோசிச்சுப் பிரயோசனமாச் செய்யிறமோ?



கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை வாசிசாலைக்குப் போனன். ஆக்களே இல்லை. எல்லாப் பேப்பருகளையும் பாத்தன். ஒராளே எழுதி வேறை வேறை பேரிலை பேப்பருகளை அடிக்கிறாங்களோ எண்டு சந்தேகம் வந்துது. முள்ளிவாய்க்காலை மறக்கேல்லை எண்டதை கம்பஸ் பெடியள் மற்றவைக்கும் சொல்லுற மாதிரி கஞ்சி காச்சுறத நல்ல விசயந்தான். எண்டு எனக்குள்ள நினைச்சுக்கொண்டிருக்க சம்பர் ஒரு பக்கத்தாலையும் கனகர் மற்றப்பக்கத்தாலையுமாய் வந்து இருந்து கொண்டிருந்தினம்.

'என்னப்பா கதிரேசண்ணை தனிமையிலை இனிமை காணுறியள்?' எண்டு கேட்டார் கனகர். 'இஞ்சார் பேப்பருகளையும் செய்தியளையும் பாத்தால் இனிமை காணுற மாதிரியே கிடக்குது? ஒரு... ஒருவிதமான மயக்கமாய்த்தான் கிடக்குது..' எண்டன் நான் ஒரு விதமான விரக்தியோடை. 'உண்மைதான் கதிரேசண்ணை ஏதாவது முன் யோசனையோடை நடக்குதே... ' எண்டு ஆமோதிச்சார் சம்பர். அந்த நேரம்பாத்து முருகேசர் வந்து ஒரு சிரிப்போடை இருந்துகொண்டார்.

'என்னப்பா முருகேசு ஒரு சிரிப்போடை வந்திருக்கிறாய்...?' எண்டு நான் பேச்சுக் குடுத்தன். ' ஓஓஓ... எங்களை யோசிச்சன்... சிர்ப்புத்தான் வருகுது..என்ன செய்ய? 'எண்டு கேட்டார் முருகேசர். 'என்னண்ணை சொல்ல வந்ததை நாங்கள் கேட்காமல் சொல்லமாட்டியளோ? எங்களைப்பற்றி என்னதான் அப்பிடிச் சிரிப்பு வருகுது?' எண்டார் கனகர் ஆவலாய்.

'எங்களையோ' எந்தப் பக்கத்தாலை எப்பிடி யோசிச்சாலும் சிரிப்புதான் வரும்... கோவமும் வரத்தான் செய்யும் அது சிலருக்குத்தான்...' எண்டு திரும்பவும் அந்தரத்திலை கதையை நிப்பாட்டிப்போட்டார். ஒருத்தரும் அவரைக் கேக்கயில்லை. எல்லாரையும் ஒருக்காப் பாத்துப் போட்டு 'அண்டைக்கு பேப்பரிலை காணியளை விக்கிறதிலை வலு விழிப்பாய் இருக்கவேணுமெண்டு ஐயா ஒராள் சொன்னதாய் ஒரு செய்தி கிடந்ததல்லே? பாத்திருப்பியள்தானே?' எண்டு முருகேசர் நிப்பாட்டினார்.

'ஓஓமோம் பாத்தனான் நெடுகவும் நித்திரை யிலை இருக்கிறவரல்லே சொல்லியிருக்கிறார்...கைதடியிலை முதல் நாளே பேரெடுத்தவரல்லே? 'எண்டார் சம்பர் உற்சாகமாய். 'அட அவரே சொன்னவர்... அப்பிடியொண்டு நடந்ததையே பேப்பரி லைதான் அறிஞ்சிருக்கிறார்போலை என்ன?' எண்டு அப்பாவித்தனம் மாதிரி நக்கலாய்ச் சிரிச்சார் முருகேசர். 'எங்கடையாக்கள் எப்பவும் இப்பிடித்தானே... நாலு வரிசமாக் கட்டிடம் எழும்பேக்கை விட்டிட்டு கலசம் வைக்கிறாங்கள் எண்டவுடனை திடுக்கிட்டு எழும்பினனாங்களல்லே?' எண்டன் நான்.

'விடியிறது தெரியாமல் நித்திரையாய் கிடந்து போட்டு எழும்பிவிட்டம் எண்டு காட்ட ஏதாலும் உளறுறது வழமைதானே?' எண்டு சிரிச்சார் முருகேசர். 'இதிலை என்னண்டால் சனம் முதலிலையே கண்டு சொல்லியிருக்குதாம்... ஆனால் ஐயாவைதான் கனக்கச் சோலியளிலை தவறவிட்டிட்டினமாம்' எண்டார் அங்காலை இஞ்சாலை பாத்தபடி சம்பர்.

'எடப்பா சம்பண்ணை... அப்பவே கண்டிருந்தால் பிரச்சனை பெரிசாயிருக்காதல்லோ? பிரச்சனையள்தானே முதலீடு?' எண்டு சிரிச்சார் முருகேசர். 'அதெண்டால் சரிதானப்பா...' எண்டார் சம்பர். நாங்களும் தலையை ஆட்டி ஆமோதிச்சம். 'இப்ப பெரியவரோடை கதைக்கப் போயிருக்கினமல்லோ? கேட்கிறதுக்குகெண்டு ஏதாலும் நடைமுறை சாந்ததாய்க் கொண்டு போயிருக்கினமாமோ?' எண்டார் கனகர்.

முருகேசர் பிலத்தாச் சிரிச்சார். பிறகு 'கறுத்தக்கொழும்பான் மாம்பழம், இதரை வாழைக்குலை பிலாப்பழம் எண்டேதாலும் கொண்டு போனாலும் போயிருப்பினம்... ஆனால் எங்கடை பிரச்சனையளைப் பற்றி அனேகமாய் இராதெண்டுதான் நினைக்கிறன்...அதுதானே வழக்கமாய்ச் செய்யிறவை... எனி...'எண்டு இழுத்தபடி நிப்பாட்டினார். 'வேறை என்ன முருகேசு ?' எண்டு கிண்டினன்.

'மம் என்ன கதிரேசண்ணை? தெரியாமத்தான் கேக்கிறியோ?' எண்டார் முருகேசர். 'அந்த எனி... எண்டு நிப்பாட்டினதிலை ஏதாலும் கிடக்கும்போலை?' எண்டு இழுத்தார் கனகர்.' அப்பிடித்தானே?' எண்டார் சம்பர். 'இருக்கும்.. இருக்கும்... டீல் கீல் எண்டேதாலும் வந்தால் என்னத்தைப் புடுங்கலாம் எண்டேதும் கட்டாயமாய் இருக்கும் எண்டல்லே கதையொண்டும் காதிலை விழுந்துது...' எண்டு மெதுவாய்ச் சொல்லி அக்கம் பக்கம் பாத்தார் முருகேசர்.

'அப்பிடியெண்டால் அதுக்கைஎங்களுக்கேதாலும் கிடைக்குமோ?' எண்டார் சம்பர் ஆவலாய். 'ஓஓஓ...தாரளமாய் ஏமாத்தம்' எண்டு முருகேசர் சிரிக்க 'ஏமாத்தம்தான் எண்டது முதலிலையே தெரிஞ்சதாலை அது ஏமாத்தமில்லை... அதெண்டாலும் கிடைக்கிறது காணாதே?' எண்டுகொண்டு எழும்பி வந்திட்டன்.

# ஓட்டம்...

# 10



துன்பானந்த சுவாமி

நாம் பருகும் நீரிலிருந்து தேனீர் கோப்பி பிற பானங்கள் எல்லாமே தேவை என்பதற்கப்பால் நாரீகம் என்கிற பெறுதியையே அதிகமதிகமாகக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்கமுடியுமா? பிற பானங்கள் என்று வருகிறபோது பேசுவதற்கு ஏராளம் உண்டு. அதிலும் குறிப்பாக மென்பானங்கள் என்று அழைக்கப்படுகிற பானங்கள் இன்று போத்தல் நீரைவிட அதிகம் பருகப்படுகிற ஒரு பானமா என ஐயங்கொள்ளத்தக்க நிலையிலுள்ளன.

பல நிறங்கள், பல சுவைகள். பலவித அளவுகளில் எந்தவிதமான தட்டுப்பாடுமில்லாமல் எங்கும் கிடைக்கின்றன என்பது அவற்றுக்கு இருக்கிற கேள்வியை உணர்த்துகின்றது. வயது வேறுபாடு பால்வேறுபாடென்று எதுவுமில்லாமல் அருந்தப்படுகின்ற (ஆடம்பரமான) ஒன்றாக எம்முள் உலாவருகிறது. எந்தவிதக் கொண்டாட்டமாயிருப்பினும் தவறாது இடம்பிடிக்கிறது. தேனீர், கோப்பி என்பவற்றை இன்று பின்தள்ளத் தொடங்கிவிட்டது. தேனீர், கோப்பி என்பவற்றினது தயாரிப்புச் செயல்முறையிலுள்ள சிக்கல்களை இவை தூரவாக்கின. எமது பாரம்பரியப் பானங்களை எப்படி தேனீரும் கோப்பியும் அன்னியமாக்கினவோ அதே காரணங்களால் இன்று மென்பானங்கள் முன்னிலைக்கு வந்துள்ளன.

இவ்வகையான மென்பானங்களை பழவர்க்கங்களின் சுவை மற்றும் நிறம் என்பன இயற்கையான பழங்களது நினைவோடு பருகத் தயங்குவதில்லை. குறித்த பழமொன்றினது நிறமோ சுவையோ இயற்கையோடு சம்மந்தமேயற்றது. செயற்கை இரசாயனக் கலவைகளது சித்துவிளையாட்டே என்பதை உணரத் தயங்குகிறோம். இவ்வகை இரசாயனங்கள் அருந்தும் போதோ சற்றுப் பின்னாகவோ பற்களைக் கூச வைப்பதைக் கவனிக்கத் தவறுகிறோம். பானத்திலுள்ள அமிலத்தினது அரிப்பினாலேயே பற்கள் தமது மேற்படையை தேய்விற்குட்படுத்துகின்றதன் அறிகுறியே இந்தப் பற்கூச்சம்.

கடினமான பற்களையே அரிக்கிற வலிமை கொண்ட குறித்த பானம் பற்களுடன் தொடுகையிலிருக்கும் நேரம் குறைவானதே. இந்நிலையில் குறைந்தளவு நேரத்துள்ளேயே தனது வலிமையைக் காட்டுகிற பானம் தான் ஆறியிருந்து சமிபாடாகிற எமது இரைப்பையை என்ன பாடுபடுத்தும் என்பதை கணிப்பிட்டுக்கொள்ள வேண்டும். பற்களுடனான தொடுகைக் காலத்தை விட அதிகமாக தொடுகையிலிருக்கும் குடலை என்ன பாடுபடுத்தும்? எண்ணிப் பார்த்திருக்கிறோமா?

அதிலும் குறிப்பாக உணவு உண்ணும்போது இடையிடையேயும் பின்னரும் சோடா அருந்துவது கட்டாயம் என்கிற நிலையில் எமது மனப்பாங்கு வந்து நிற்கிறது. சதப்பிடும் சாப்பாட்டின் தரம் எப்படி என்பதே பெருத்தவினாவாக உள்ள நிலையில் உணவோடு உட்செல்லும் கேடுவிளைவிக்கும் பொருட்கள் போதாதென்று மேலதிகமாகவே சோடாவை அருந்துகிறோம் என்பதை உணர்ந்துள்ளோமா? உணர்ந்துகொள்ள விளம்பரங்களும் அதன் வழிவந்த நாகரிக மனப்பாங்கும் பெருந்தடையாகவே இருக்கிறது என்பதே உண்மை.

இத்தகையபானங்களில் இனிப்புச் சுவை மிக அதிகம் என்பதும் அத்தகைய சுவையை சாதாரண சீனி மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியாதென்பதும் வெளிப்படை. இனிப்பிற்காகச் சேர்க்கப்படுவது இரசாயனச் சேர்வைகளினது பெறுதிப் பொருளே என்பதும் வெளிப்படை. ஆனால் இத்தகைய பானங்களை வழங்காவிட்டால் ஏற்பாட்டளருக்கும் அருந்தாவிட்டால் பங்கேற்பவருக்கும் அவமானம் என்கிறவிதமாக எமது மனம் பழக்கப்பட்டோ பழக்கப்படுத்தப்பட்டோ இருக்கிறது.

கழிப்பறையை அதன் கறையை நீக்கக்கூடியளவு வலிதான கொக்கோக்கோலா போன்ற பானங்களைக் குடித்தால்தான் உணவு சமிபாடடையும் என்கிறவித

## வாசுதேவனின் கவிதைகள்

# நதி

தானாய்
ஓடி வரும் நதி
தூரத்தில்
கடலைக் கண்டு குழம்புகிறது

திரும்ப முடியாமல்
கிளை விட்டு
திசை மாறத் தவிக்கிறது

அப்போதும் நதி
ஓடுவதுபோல்
தெரிந்தாலும்
ஓடவில்லை

உண்மை என்னவென்றால்
இப்போது
கடல் அதை
இழுக்கத் தொடங்கிவிட்டது.



## இந்த வாரச் சொல்

# விறுத்தம்

விறுத்தம் என்கிற சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பெரும்பாலும் வினைச் சொல்லாகவே பயன்படுத்தப்படுகிறது. விருத்தம் என்பது தமிழில் ஒரு வகைப் பா வகையைக் குறிப்பதாக இருக்க இந்த விறுத்தம் என்பதோ நக்கல் தொனியுடன் இழிவுபடுத்தும், குறைத்து மதிப்பிடும், தகுதிப்பாட்டை இல்லாதவர் என்று சுட்டும் விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

":புள்ளைய வளத்து வைச்சிருக்கிற விறுத்தத்தப் பார்"
"அவற்ற விறுத்தத்தில கதைக்க வந்திட்டார்"
"அவேன்ர விறுத்தம் எங்களுக்குத் தெரியாதோ"

இவ்வாறு இழிவான வார்த்தையாகக் கருதப்படும் விறுத்தம் அதற்கு எதிர்விதமாகப் பொருள் கொள்ளும் வகையிலும் பேச்சு வழக்கில் பாவனையிலுள்ளது.

"தம்பி இது நல்ல விறுத்தம் பார்க்கிறதுக்குத் திறமாய் இருக்குது"
"நல்ல விறுத்தமான ஆக்கள் அவையின்ர பக்கம் இருக்கினம்"

என்பதாக விறுத்தம் என்கிற சொற் பாவனை பேச்சு மொழியில் பலவித அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது.

மாகவே எமது மனம் எண்ணுகிறது. அவ்விதமே அது போதிக்கப் பட்டிருக்கிறது. கண்மூடித்தனமான பின்பற்றல் பழக்கம் அவ்விதமாக எமது மூளையில் நிறைந்துள்ளது. கழிப்பறையின் கறையை இல்லாதொழிக்கும் அது அல்லது அது கொண்டிருக்கும் சேர்மானம் உணவை நொதித்தோ எரித்தோ விரைவாக அழிக்கும் என்பது யதார்த்தமானது. அவ்வாறான ஒரு செயற்பாடு நடக்கும்போது எமது உள்ளுறுப்புகள் எந்தளவுக்கு சேதப்படுத்தப்பட வாய்ப்புகள் இருக்கின்றன?

வயிற்றில் ஒன்றுமில்லாதபோது பசியெடுக்கும். எப்படி ஒன்றுமில்லாமலானது என்பதைக் கவனத்திலெடுக்க தவறிவிடுகிறோம். சாப்பாடு சமிபாடடைய ஊக்கப்படுத்த இயற்கையாகஒன்றுமே இல்லையா? எம்முன்னோர் அதற்காகவே பல துணை உணவுகளை வைத்திருந்தனரே? ஆதில் முக்கியமானது இரசம். ஆதனைவிட உணவினது சுவையை, மணத்தை என மெருகூட்டுவதற்காக எத்தனை பொருட்களைப் பயன்படுத்தினார்கள்? வலிமையான நாட்டுக்கோழியைச் சாப்பிட்டு சமிபாட்டுப் பிரச்சனையென்று அலைந்தார்களா? இல்லையே. இப்போது முழுவதுமே செயற்கையாக விளைந்த மிக மெதுமையான புறொயிலர் கோழியைச் சாப்பிடுவதற்கு கொக்கோகோலா குடித்துத்தான் சமிபாடடையச் செய்ய வேண்டும் என்கிற மனநிலையில் உள்ளோம்.

சமிபாடு என்பது முக்கியமானது. அது பற்றியும் பேச நிறையவே உள்ளது. பேசுவோம்.



# குழிப்பந்து இரகசியம்...!

M.சார்ளிஸ்

குழிப்பந்தாட்டத்தை ஆங்கிலத்தில் கோல்ஃப் என்று குறிப்பிடுகின்றனர். 15ஆம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தில் அறிமுகமான விளையாட்டு இது. 1900, 1904, 2016, 2020 ஆம் ஆண்டுகளில் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் இந்த விளையாட்டு இடம்பெற்றிருந்தது. இந்த விளையாட்டு புற் தரைகளிலும், மலைப்பாங்கான பெரு வெளிகளிலும் விளையாடப்படுகிறது. கோல்ஃப் மைதானத்தில் 9-18 வரையான பந்து விழும் குழிகள் இருக்கும். 15ஆம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தில் இந்த விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டபோதே 18 குழிகள் அறிமுகப்பட்டுத்தப்பட்டு விட்டன.

**செல்வந்தர்களின் விளையாட்டு**

குழிப்பந்தாட்டம் ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பிடிக்குமளவுக்குப் பிரசித்தி பெற்றிருந்தபோதும்கூட மற்றைய விளையாட்டுக்களைப் போல அதிகம் பிரபலமாகாமல் இருப்பதற்குக் காரணம் அது செல்வந்தர்களின் விளையாட்டாக இருப்பதாலேயே ஆகும். குழிப்பந்தாட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் துடுப்பு மட்டை 'கிளப்' எனப்படும், இந்த அடிகோலால் பந்தை மைதானத்திலுள்ள இடர்களில் மாட்டிக் கொள்ளாமல் தூரத்தேயுள்ள சிறிய குழிக்குள் தள்ளுவதே ஆட்டம். 9 அல்லது 18 குழிகள் கொண்டவையாக இதற்கான ஆட்டமைதானங்கள் இருக்கும். இந்தக் குழிகளில் ஒவ்வொன்றாக மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தட்டுகள் அல்லது அடிகள் மூலம் பந்தை விழச் செய்பவரே வெற்றி பெற்றவர்.

கோல்ஃப் மைதானங்கள் மிகப் பெரியவையாக இருப்பதால், விளையாடுபவர்கள் சில சமயம் சிறு மின்கல ஊர்திகளில் குழிகளுக்கிடையே மைதானத்தில் பயணம் செய்வதும் உண்டு. இது வணிக உலகில் மிக மதிப்புப் பெற்ற விளையாட்டாக இருப்பதால், இப்போட்டிகளில் பரிசுத் தொகையும், புகழும் அதிகமாக இருக்கிறது. இதை விளையாடுபவர்கள் செல்வந்தர்களாகவும், உயரதிகாரிகளாகவும், முக்கியஸ்தர்களாகவும் இருக்கிறார்கள். இந்த விளையாட்டில், தொடக்கக் காலங்களில் பெண்கள் விளையாட அனுமதிக்கப்படவில்லை. தற்காலத்தில் பெண்களும் விளையாடுகின்றனர்.

**விதிமுறைகள்**

குழிப்பந்தாட்டம் விளையாடுவதற்கென சில பொதுவான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதனை மீறுபவர்களுக்கு அபராதங்கள் விதிக்கப்படும்.

ஸ்கொட்லாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, கனடா, அமெரிக்கா, ஸ்வீடன், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இந்த விளையாட்டுத் தற்போது பிரபலம் பெற்றிருக்கிறது. 1984 ஆம் ஆண்டில் முதன் முதலாக சீனாவில் குழிப்பந்தாட்ட பய்யிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 21-ஆம் நூற்றாண்டில் சீனாவில் குழிப்பந்தாட்டம் தடை செய்யப்பட்டது. பின்பு மறைமுகமாக இந்த தடையினை சீன அரசு தடைகளை விலக்கிக் கொண்டது.

**விளையாட்டை விட இரகசியங்கள்**

இந்த விளையாட்டில் இருவர் இணையாக விளையாடும்போது அவர்கள் முக்கிய ராஜதந்திரிகள், தொழிலதிபர்கள், புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள், பணத்துக்காகப் படுகொலை மற்றும் கடத்தல்களைமேற்கொள்ளும் நபர்கள், சட்டபூர்வமற்ற ஆயுதக் கடத்திலில் ஈடுபடுவோர், ஊடகவியலாளர் ஆகியோராகப் பெரும்பாலும் இருப்பதுண்டு. பந்தை அடித்துவிட்டு அந்த இடத்தை நோக்கி இருவரும் கதைத்துக்கொண்டு செல்வதும், யாருமற்ற அந்தப் பிராந்தியத்தில் தமக்கிடையிலான இரகசியங்களை பகிர்ந்துகொள்வதும் நடக்கும். அது அவர்களின் மிக இரகசியமான செயற்பாடாக இருக்கும். அந்த இடத்தில் வேறு நபர்கள் சென்று உளவு பார்ப்பதில்லை. இவ்வாறாக இந்தக் குழிப்பந்தாட்டமானது விளையாட்டு என்பதற்கு அப்பால் வேறு பல தேவைகளுக்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது.

# ஏனிந்தப் பட்டிமன்ற அரசியல்?

ரவீந்திரன்

தமிழர் மத்தியில் காணப்படும் மேடைப்பேச்சுக்களில் மிகவும் குதர்க்கமானதாக அமைவது பட்டிமன்ற மேடைப்பேச்சாகும். அதில் ஒரு தலைப்பில் பேச ஆரம்பித்து இரு தரப்புகளும் மையக் கருத்தைத் தாண்டி ஒருவரது தோற்றத்தைப் பார்த்து மற்றவர்கள் நக்கல் நளினமாகப் பேசுவது வரை சென்றுவிடுவார்கள். அதைப் பார்த்துப் பார்வையாளர்கள் கை தட்ட இறுதியில் அந்தப் பட்டிமன்றம் ஏன் தொடங்கப்பட்டது என்ற நோக்கமே தெரியாது முடிவுக்கு வரும். அதற்கிடையில் நடுவர் இடையிடையே தேவையற்ற கருத்துக்களை முன்வைப்பார். அதனாலும்கூட விடயம் திசை மாறிப்போவது வழக்கம். அத்தகைய ஒரு பட்டிமன்ற விவாதம்போல பயனற்ற ஒன்றாகவே தமிழ் அரசியல்வாதிகளின் போக்கு மாறிவிட்டது. அவர்களின் நாடாளுமன்ற விவாதங்கள்கூடப் பயனற்ற பட்டிமன்ற விவாதங்கள்போலவே ஆகிவிட்டன.

**குறிப்பிட்ட விடயத்தில் முரண்பாடு**

தமிழ்த் தேசியம் பேசுவோர், தமிழ்த்தேசியத்துக்கு மாறானவர்கள் என்று இரு பிரிவினராகத் தம்மைக் காட்டிக்கொண்டாலும் சிங்களத் தலைவர்களிடம் சலுகை பெறுவதற்காக முன் காதவாலும் பின்கதவாலும் செல்கிற நிலையே தமிழ் அரசியல்வாதிகளிடம் எப்போதும் நடக்கிறது.

தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தாலும் வாக்கெடுப்பின் போது ஆட்சியாளர்கள் நன்மை அடையக்கூடியாவாறு வாக்களித்தல், நடுநிலை வகித்தல், வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது இருந்தல் ஆகிய நிலைப்பாடுகளை எடுக்கின்றனர். இதனால் ஆட்சியாளர்களை மறைமுகமாக வெல்லப் பண்ணி அதன் மூலமாகத் தமக்குத் தேவையான தனிப்பட்ட விடயங்களை ஆட்சியா ளர்களிடமிருந்து பெற்று விடுவதால் தான் எதிர்க்கட்சியில் இருக்கும் உறுப்பினர்களும் மிகக் குறுகிய காலத்தில் பணக்காரர்களாகவும் சொத்துக்களை சேர்ப்பவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

பட்டிமன்றத் தலைவர்போல சிங்கள ஆட்சியாளர்களை ஆதரித்தும் எதிர்த்தும் பேசுபவர்களாகத் தமிழ்த் தேசியவாதிகளும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களும் உள்ளனர்.

**தமிழ்த் தேசிய உடைவுகள்**

இத்தகைய பட்டிமன்ற அரசியலால் அதிகம் சிதறிக் கிடப்பது தமிழ்த் தேசியமே. இதில் இருவேறு பிரிவுகள் உள்ளன. ஆயுதம் தாங்கிப் போராடி அரசியலுக்கு வந்தவர்கள், அவ்வாறல்லாத ஜனநாயகவாதிகள் - அகிம்சைவாதிகள் எனப் பிரிவுகள் உள்ளன.



தமிழ்த் தேசியத்துக்கான வாக்குகள் சிதைவடைந்து போயுள்ள நிலையில் யார் உண்மையான தமிழ்த் தேசியவாதிகள் என்பதை நிருபித்துக் காட்டுவதிலேயே அதிக போட்டி நிலவுகிறது. இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணி ஒற்றையாட்சிக்குள் தீர்வு வேண்டாம் என்றும் ஏனையவர்கள் நாட்டைப் பிரிக்காத அல்லது பிளவுபடாத ஒற்றையாட்சிக் குள்ளோ, 13க்குள்ளோ தீர்வு கிடைத் தாலே போதும் என்ற நிலைப்பட்டிலும் உள்ளனர்.

இவ்விரு அணுகுமுறைகளையும் அடையும் எந்தவொரு காத்திரமான செயல்களோ மாற்றுத் திட்டங்களோ இருசாராரிடமும் இல்லை. மக்கள் மீது அக்கறையில்லாதிருப்பதும் ஒரு பிரச்சினையைத் தமிழ்த் தேசியவாதிகள் ஒன்றாக நின்று எதிர்ப்பதும் தீர்ப்பதும் இல்லை.

**தையிட்டி விகாரை விடயம்**


2018இல் விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு இவ்வளவு காலமும் எந்தவொரு இடையூறும் இன்றி அது கட்டி முடிக்கப்பட்டு அதற்கான வர்ணம் பூசப்பட்டுக் கலசமும் பொருத்தப் பட்டுவிட்ட நிலையில் 100அடி உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் அந்த விகாரை சென்றவாரம்தான் தமிழ் அரசியல்வாதிகளின் கண்களில் தட்டுப்பட்டிருக்கிறது. இது ஒரு விடயத்தில் தமிழ் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் எவ்வளவுக்குச் செயற்றிறன் அற்றவர்களாக உள்ளார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகம் பயன் படக்கூடியவர்கள்.

தற்போதைய தமிழ்த் தலைவர்களின் பட்டிமன்ற விவாத அரசியலை மக்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் ரணில் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகிற போதிலும் ரணில் அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் சஜித்தோ வேறு சிங்களத் தலைவர்களோ தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் விகாரைக் கட்டுமாணங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கப் போவதில்லை. ஏன்எனில் அவர்கள் பௌத்த மதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்க மாட்டார்கள். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் எந்தச் சிங்களத் தலைவரும் இந்தப் புதிய விகாரைகளை உடைக்கப்போவதில்லை என்பதைத் தமது அமைதியின் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர். இதனால், இனியாவது தமிழ் அரசியல்வாதிகள் தமக்குள் பட்டிமன்றம் நடத்தி அடிபடும் நிலையை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

# ஏன்...?

# அப்படி...?

நட்சத்திரா




## ஏறிச் செல்லும் வாகனங்களுக்கு முன்னுரிமை

வாகனத்தில் போகிற, வருகிற வாகனச் சாரதிகள் சமதரை வீதிகளில் இடப்பட்டிருக்கும் வெள்ளை, மஞ்சள் கோடுகள், சாரதியம் சார்ந்த காட்சிப்படுத்தல்களைக் கவனித்து வாகனம் செலுத்துவது வழக்கம். அவ்வாறிருந்தும் சாரதிகள் தவறிழைப்பதும், அதனால் பல விபத்துகள் நேர்வதும், இறப்புகள் நிகழ்வதும், அங்கங்களை இழப்பதையும் காண்கிறோம். அது காலத்துக்குக் காலம் அதிகரித்துச் செல்கிறதே தவிர குறைவதாய் இல்லை.

சமதரைப் பாதைகளைவிட மலைப்பகுதிப் பாதைகளில் வாகனங்களைச் செலுத்துவது அதிக சிரமம். இதனால் மலைப்பகுதிப் பாதைச் சாரத்தியத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அதற்கு முக்கிய காரணம் அந்த வீதிகள் மலையை வெட்டிப் போடப்பட்டவை ஆதலால் அதிகம் அகலமான பாதைகளாக இருப்பதில்லை. வளைவுகளையும், ஏற்றங்களையும், சடுதியான இறக்கங்களையும் சாரதிகள் சந்திக்க வேண்டியிருக்கும். இவ்வாறான மலைப் பாதைகளில் மலையில் ஏறிக்கொண்டிருக்கும் வாகனங்கள் அவற்றின் இயந்திர இயக்கத்துக்கு மாறாக மெதுவாகவே ஏறும் வலுவைக் கொண்டிருக்கும். ஏறும் அந்த வாகனத்தை இடையில் வாகனத்தை நிறுத்தவோ, கியர் மாற்றவோ சந்தர்ப்பம் இருக்காது என்பதால் ஏறி வரும் வாகனங்களுக்கு இடையூறாக மலையிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் வாகனங்கள் இருக்கக் கூடாது என்பதைக் கடைப்பிடிக்கிறார்கள். இறங்கி வரும் வாகனங்கள் இயந்திர இயக்கத்துக்கு மேலதிகமாக இறங்கும் வலுவைக் கொண்டிருப்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதும், கட்டுக்குள் வைத்திருப்பதும் அங்கு கடைப்பிடிக்கப்படும் சாரதிய நடை

முறையாக உள்ளது. இதனால்தான் மலைப்பகுதிகளில் ஏறிச் செல்லும் வாகனத்துக்கு முன்னுரிமை அளிக்கும் விதத்தில் இறங்கிச் செல்லும் சாரதிகள் வழிவிட்டுக் கொடுக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக மலைப் பாதைகளில் சாரதிகள் இரவு நேரப் பயணத்தையே அதிகம் தெரிவும் செய்கின்றனர். மலைப்பாங்கு மறைவுகளுக்குள்ளால் வரும் வாகனம் பகலில் கண்ணுக்குத் தெரியாது, அதுவே இரவானால் அது பாய்ச்சும் மிள் ஒளியை வைத்து மறைவில் வாகனம் வருவதை ஊகித்துக் கொள்ளலாம் என்பதாலேயே அவ்வாறு இரவுப் பயணத்தை விரும்புகின்றனர்.

---

# வாசுதேவனின் கவிதைகள்



*இன்று முழுதும்*
*கடலில் நீராடினேன்*
*காலையில் தொடங்கி மாலை வரை*

*கடல்*
*என் நீச்சலின் பொருட்டு*
*தன்னைச் சிதறடித்துக் கொண்டது*
*நான் சுழியோடியபோது*
*என்னை விழுங்கி விழுங்கி*
*உள்வாங்கிக் கொண்டது*
*என் விளையாட்டுக்களை*
*விளையாட்டாகவே எடுத்துக்*
*கொண்டது*
*என்னை மிதக்க விட்டு*
*தாங்கிப் பிடித்துக்கொண்டது*
*என் துப்பலைப்*
*பொருட்படுத்தவில்லை*
*என் சிறுநீருக்குக்கூட*
*முகம் சுழிக்காமல்*
*என் விலாவிற்குள் வந்து வந்து*
*சத்தமாய் முத்தமிட்டுச்*
*சென்றது*

*கடல்*
*எவ்வளவு இணக்கமானது*
*எவ்வளவு இசைவானது*
*எவ்வளவு பொறுமையானது*
*எவ்வளவு புரிந்துணர்வு அதற்கு*
*எதை உள்வாங்கினாலும்*
*இறுதியில் வெண்ணிறப்*
*புன்னகையாய்*
*கரைவந்து தந்துவிடும்*
*பேரிதயம் அதற்கு*

*எப்பேர்ப்பட்ட கடலிது!*

*இருந்தால்*
*கடலைப்போல*
*இருக்கவேண்டுமென்று*
*எண்ணிக்கொண்டேன்*

*அலைபோல்*
*நானோர் பெருமூச்செறிந்த*
*அக்கணம்*
*கடலில் நீராடும் கடலாய்*
*என்னைக் கண்டேன்*

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781